www.tamilarangam.net

தமிழ் ஈழ விடுதலை இயக்கம்

Thamil Eelam Liberation Organization

TELO

# இனங்காண்போம் வேஷதாரிகளை!

தமிழீழப் போராட்டமானது சர்வதேச ஏகாதிபத்தியங்களினதும் அதன் அடிவருடிகளினதும் கைகளில் சிக்குண்டு மீட்சியுறத் தவிக்கும் இவ்வேளையில் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை மக்கள் ஆதரவுடன் செவ்வனே நடாத்த வேண்டிய விடுதலை அமைப்புகள் தமது சுயதேவைகளைப் பூர்த்தி செய்யவோ அன்றி போராட்டம் பற்றி ஆழ்ந்த சிந்தனையன்றியோ சில அராஜக மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. இந்நிலை தொடரும் பட்சத்தில் தமிழ் பேசும் மக்களுக்கும் விடுதலை அமைப்புகளுக்குமிடையில் ஐக்கியம் ஏற்படுமா என்பது சந்தேகமே! இந்நிலைகளை தவிர்க்கும் பொருட்டு கூட்டு நடவடிக்கைகட்கு பிற ஸ்தாபனங்களை அழைத்திருந்தோம். ஆனால் மக்களால் மக்களுக்காக என பிதற்றிக்கொள்ளும் ஸ்தாபனங்கள் மக்களுக்கு ஏற்படும் இம்சைகளுக்கு எதிராக போராடத் தயங்கி எம் வேண்டுகோளை நிராகரித்து விட்டன. இந்நிலையில் தனித்து நின்று மக்கள் விரோத சக்திகளை இனங்காட்டும் முயற்சியில் ஈடுபட்டோம். இம் முயற்சியானது பல சந்தர்ப்பங்களில் கொள்ளை முயற்சிகளை தடுத்து நிறுத்தியுள்ளது. எனவே தான் நாம் சக அமைப்புகளுடன் பேச விரும்பவில்லை. மக்களுடன் பேச விரும்புகின்றோம். மக்களே! விடுதலை ஸ்தாபனங்களால் தமது சுய தேவைகளை சிறு சிறு உற்பத்திகளின் மூலம் தீர்க்க முடியாது பாரிய வேலைத்திட்டங்களை, தொடர்ச்சியான வருமான வழி முறைகளே இல்லாமல் விடுதலை ஸ்தாபனங்கள் தம் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாது என்பதை ஏமாறுகிறீர்கள்! இனங்காணுங்கள்! தூக்கியெறியுங்கள்!

மேலும் தொடர்சியான மக்கள் விரோத செயற்பாடுகளின் காரணமாக இரவுக் காவலில் ஈடுபட்டு வந்த எம் தோழர்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடந்த 16-11-85 அன்று அதிகாலை 1 மணியிலிருந்து 3 மணிவரை கடும் மோதல் ஏற்பட்டுள்ளது.

அதிகாலை 1 மணியளவில் 2 EPRLF தோழர்கள் நல்லூர் இந்துவிடுதியின் முன்னே மோட்டார் சைக்கிளில் வந்தவர் இவர்களை அடையாளம் கண்டுகொண்ட எம்தோழர்கள் இவர்களை போக அனுமதித்தனர் யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற இவர்கள் பாரதியார் சிலை அருகே இராணுவ சீருடையுடன் நின்ற L.T.T.E. இனரைப் பார்த்து விட்டு "ஆமி,.ஆமி" என கூச்சலிட்டவாறு ஓடினர். பாரதியார் சிலை அருகே 3 வாகனங்களில் வந்த 50-60 L.T.T.E. இனர் கொச்சைத் தமிழிலும் சிங்களத்திலும் பேசி அவ்விடத்தில் உறங்கிக் கொண்டிருந்த மக்களை விரட்டியுள்ளனர். பின்னர் நல்லூர் கந்தசாமி கோவிலை நோக்கி வந்த L.T.T.E இனரை எம் தோழர்கள் 150 - 200 யார் தூரத்திலேயே நிறுத்தி "நாம் TELO Centry நிற்கிறோம்" எனக் கூறியவுடன் L.T.T.E இனர் சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்களை எம் தோழர்களை நோக்கித் தீர்த்தனர். எமது தோழர்களின் பதில் வேட்டுக்களுக்கு மத்தியில் 2 மணித்தியாலங்கள் மோதிய L.T.T.E. இனர் பின்னர் வாபஸ் வாங்கினர்.

ஆனாலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் 18-11-85 அறிக்கையின் படி "பலாலி வீதியில் நடைபெறவிருந்த கொள்ளை முயற்சி தம்மால் முறியடிக்கப்பட்டதாக" தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கைக்கும் நடைபெற்ற சம்பவத்துக்குமிடையில் பல முரண்பாடுகள் உள்ளன. ஆதலால் மக்களினதும் பகட்டை நம்பி ஏமாந்துள்ள (தமிழீழ விடுதலைப் புலிகளிலுள்ள) தோழர்களினதும் சிந்தனைக்கென சில வினாக்களை முன்வைக்கிறோம்;

1. பலாலி வீதியில் கொள்ளை முயற்சி நடைபெற்றதாயின் யாருடைய வீட்டில் நடைபெற்றது?
2. அவ்வாறு கொள்ளை முயற்சி பற்றிய செய்தி அறிந்து விரைபவர்கள் உடுத்த உடுப்புகளுடன் கிளம்புவார்களே அன்றி இராணுவ சீருடைகள், சப்பாத்துக்கள் அணிந்து அரச இராணுவம் போன்று செல்ல மாட்டார்கள். ஆனால் L.T.T.E இனர் இராணுவ சீருடையில் வந்துள்ளனர் இது ஏன்?
3. கொள்ளையை தடுக்க வந்திருப்பின் பாரதியார் சிலை அருகே கொச்சைத் தமிழிலும் சிங்களத்திலும் பேசி மக்களை கலைக்க வேண்டிய அவசியமென்ன?
4. "நாம் TELO" என எம் தோழர்கள் கூறியது அயலில் உள்ளவர்களுக்கு கேட்டுள்ளது. உங்களுக்கு (LTTE) கேட்கவில்லையா? அல்லது கேட்டும் எம் தோழர்களை அழித்து பின் நல்லூர் கந்தசாமி கோவிலை கொள்ளையிட முயன்றீர்களா?

எனவே மக்களே இவ்வினாக்களுக்கு விடைகாண முயலுங்கள்.

போலிகளை இனங்காணுங்கள்.

**சிந்திப்போம்! விமர்சிப்போம்!! செயலாற்றுவோம்!!!**

அரசியற் பிரிவு
தமிழ் ஈழ விடுதலை இயக்கம்

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தினால் [illegible]-11-85 அன்று விநியோகிக்கப்பட்டது.

தமிழ்த் தேசியப் ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எழுச்சி

விசேஷ அறிக்கை — தமிழ் ஈழ விடுதலை இயக்கம்

## ரெலோ கண்டனம்

## விடுதலையை பின்தள்ளும் செயல்களில் ஈடுபடும் குழுக்களை இனங்காணுவோம். புரட்சிப் பாதையில் இருந்து அகற்றுவோம்.

10.10.1985 அன்று இரவு புத்தூர் நவக்கிரி என்ற இடத்தில் பதினைந்து ஆயுதம் தரித்த இனந்தெரியாத நபர்கள் அங்கு ஒரு வீட்டிற்குள் அத்துமீறி உட்புகுந்து அங்குள்ளவர்களை பலமாகத் தாக்கி அங்கிருந்து பல லட்சம் பெறுமதியான நகைகள் மற்றும் பொருட்கள் பணம் என்பவற்றை அபகரித்து சென்றுள்ளனர். அங்கு இக்குழுவின் தாக்குதலுக்கு இலக்காகி இராமச்சந்திரன் என்பவர் அவ்விடத்திலேயே மரணமானார்.

18.10.85 அன்று, லாரி, வேன்களில் வந்த ஆயுதம் தரித்த நபர்கள் யாழ் வண்ணார் பண்னை பெருமாள் கோயிலைச் சுற்றி, கை எறிகுண்டுகளை வீசி வெடிக்கச் செய்து, கோயிலில் உட்புகுந்து 5 இலட்சத்துக்கு மேற்பட்ட நகைகள், பணம் என்பவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளதுடன் கோயில் பொறுப்பாளர்கள் மூவரையும் கடத்திச் சென்று விட்டனர்.

---

மிகவும் சிக்கலான ஒரு சூழ்நிலைக்குள் தமிழ் பேசும் மக்கள் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் வேளையில் மக்களின் சிந்தனை எண்ணங்களுக்கு மதிப்பளிக்காது நடந்து கொள்வது தவிர்க்க வேண்டியது ஆகும்.

இந்நிலையில் தவிர்க்க வேண்டியனவற்றையே சில விஷமிகள் அதாவது ஆயுதம் தரித்த குழுக்கள் நடத்துவதில் குறியாயிருக்கின்றது மிகவும் வேதனைக்குரியதாகும்.

புரட்சிகர நோக்கில், புரட்சிகர ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்க, தயாரிப்புகளை மேற்கொண்டுவரும், விடுதலையில் நாட்டமற்ற குழுக்கள், விடுதலையை பின்தள்ளும் நோக்கில், மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

புத்தூர் நவக்கிரியில், அப்பாவிக் குடும்பத்தை தாக்கி பல இலட்சம் பெறுமதியான நகைகள் மற்றும் பொருட்களை கொள்ளையடித்தும், அப்பாவிக் தமிழ் மகனான இராமச்சந்திரன் என்பவரை கொலை செய்ததும், இந்நிகழ்ச்சிகளாகும்.

மற்றும், 18.10.85 அன்று யாழ் வண்ணார் பண்ணை பெருமாள் கோயிலில் 5 இலட்சத்துக்கு மேற் பெறுமதியான நகைகள் பணம் கொள்ளையடிக்கப்பட்டதும், கோயில் பொறுப்பாளர்கள் மூன்று பேரை கடத்திச் சென்றுள்ளதும், இந்நிகழ்ச்சிகளாகும். இக்கோயில் கொள்ளையையும், மற்றும் புத்தூர் நவக்கிரி கொள்ளையையும் கொலையையும் நடத்திய ஆயுதம் தரித்த இக்குழுக்கள், தனிப்பட்ட தங்கள் நலனை மட்டும் நோக்கில் கொண்டுள்ளனரேயன்றி, மக்கள் நலனையும், மக்களின் எண்ணக் கருத்துகளுக்கு மதிப்பளிக்கும் தன்மையையும், விடுதலையின் அவசியத்தையும் பற்றிய தீர்க்கமான சிந்தனை உடையவர்களல்ல என்பது ஊர்ஜிதமாகின்றது.

இவர்களை இப்போக்கில் மேலும், மேலும் வளர அனுமதிப்பதென்பது, தமிழ் பேசும் மக்களுக்கு அளிக்கும் துரோகம் ஆகும்.

அரசியல் தீர்வு சிறிலங்கா அரசு, போர் நிறுத்தம், கண்காணிப்புக்குழு, என ஒரு பக்கமும், ஆயுத இறக்குமதி, இராணுவச் செலவு அதிகரிப்பு, வன்முறைகள் நிகழ்த்துதல் என மறுபுறமும், என இரட்டை வேடம் போட்டுக் கொண்டு மக்களிடையேயான புரட்சிகர குணாம்சங்களை பிரச்சார மூலமும், வன்முறை மூலமும் சிதறடித்து விட முனைந்து நிற்கின்றது.

இந்நிலையில் மக்கள் விரோத செய்கைகள் செய்யும் இவ் ஆயுதம் தரித்த குழுக்கள் மேலும் மக்களின் புரட்சிகர குணாம்சங்களைச் சிதறடிக்கும் செயலாக, அதாவது, அரசின் செயல்களுக்கு துணைபோய்க் கொண்டிருக்கின்றனர். இப்படியான கொள்ளைகளையும், கொலைகளையும், அதாவது மக்கள் விரோத நடவடிக்கைகளை தமிழீழ விடுதலை இயக்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது. அத்துடன் விடுதலையில் நாட்டமற்ற இவ் ஆயுதம் தரித்த குழுக்களை மக்கள் இனங்கண்டு புரட்சிப் பாதையில் இருந்து அகற்றி விடுவதில் கண்ணும் கருத்துமாக மக்கள் செயல்பட வேண்டும் என்பதையும் அறியத் தருகிறோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## TELO வின் வளர்ச்சிப் போக்கும் மேலும் சதி முயற்சிகள் தொடர்கின்றன.

இலங்கை சுதந்திரம் அடைந்ததிலிருந்து சிங்கள பேரினவாத அரசினால் திட்டமிட்ட முறையில் ஒடுக்கப்பட்டுவந்த தமிழ் மக்களின் பூரணமான விடிவிற்கு சுதந்திர தமிழ் ஈழமே ஒரே வழியென்ற உறுதியுடன் யதார்த்தமான முறையில் மக்கள் யுத்தப்போராட்டத்தை முன்னெடுத்துவரும் தமிழ் ஈழவிடுதலை இயக்கத்தினை பிளவுபடுத்த கடந்த காலத்தில் சில தீய சக்திகள் முயன்று தோற்றுப்போனதை அனைவரும் அறிந்ததே. இத் தமிழ் ஈழ தேசபிதா தங்கத்துரை, தளபதி குட்டிமணி ஆகியோரால் கட்டுக்கோப்பான முறையில் கட்டியெழுப்பப்பட்டு தற்போது அவர்கள் வழி வந்த தலைவர் சிறிசபாரத்தினம் அவர்களால் சரியான, உறுதியான, திடமான முறையில் வழிநடாத்தப்படும் எமது இயக்கத்தினை எச்சக்தியாலும் பிளவுபடுத்தவோ அழிக்கவோ முடியாதென்பதை நிரூபித்துள்ளது. இச்சதி முயற்சியின் போது பல இன்னல்களைக் கண்டபின்பும் எமது விடுதலைப்போராட்டப் பாதையில் திருப்பு முனையை ஏற்படுத்தி, மக்களிற்கு பாதுகாப்பளித்து, இலங்கா இனவெறி அரசுக்கெதிராக பல பாரிய தாக்குதல்களை நடாத்தி அவர்களைக் கதிகலங்க வைத்து மக்கள் மத்தியில் வேரூன்றிவரும் எமது இயக்க வளர்ச்சியை ஜீரணிக்க முடியாத அதேதீயசக்தி மீண்டும் அதே மாதிரியான சதிமுயற்சியில் ஈடுபட்டுள்ளதால் நாம் இத்தீயசக்தியினை அம்பலப்படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

1984ன் ஆரம்பப் பகுதியில் விடுதலை இயக்கத்தின் ஒற்றுமை பற்றி எமது மக்கள் கவலைப்பட்டுக்கொண்டிருந்த நேரம் ஒற்றுமைக்காக உண்மையில் பாடுபட்டு தன்னுடன் EROS, EPRLF போன்ற சக இயக்கங்களை இணைக்க முயற்சி செய்து கொண்டிருந்த TELO மக்கள் மத்தியில் நம்பிக்கையை வளர்த்தது. இவ்வேளையில் சிறுசிறு தாக்குதல்களை மேற்கொண்டு களத்தில் இணைவோம், களத்தில் இணைவோம் என்று கூறிக்கொண்டு தமது நடவடிக்கைகளை சரியான முறையில் மக்கள் மத்தியில் கூறி வளர்வதில் நம்பிக்கையற்றிருந்த LTTE யினர் எமது இயக்க உறுப்பினர்களான சுதன், ரமேஸ் என்பவர்களைப் பயன்படுத்தி எமது தலைவரைக் கொல்ல சதி முயற்சியில் ஈடுபட்டனர். அதுதோற்றுப் போகவே எமதியக்கத்தை பிளவு படுத்த பல வழிகளில் நேரடியாகவும் முயன்றனர். LTTE யினைச் சேர்ந்த மாத்தையா, ரகு என்பவர்கள் நேரடியாகவே எமது முகாம்களிற்கு வந்து ரெலோக்களைப் பிரித்தெடுக்க முயன்றனர். இச்சதி முயற்சிகள் TELO வின் நிதானமான நடவடிக்கைகளினால் தோற்கடிக்கப்பட்டது.

மேற்கண்ட சதிமுயற்சியைக் கண்டித்தும் ஒற்றுமையை வலியுறுத்தியும் யில் இருந்த திரு. நித்தியானந்தன், திருமதி நிர்மலா நித்தியானந்தன் போன்றோர் இயக்கத்தை விட்டு வெளியேறினர். இவர்கள் தாங்கள் வெளியேறியமைக்குக் காரணம் தலைவர் சிறிசபாரத்தினத்தைக் கொல்ல LTTE யினர் எடுத்துக்கொண்ட சதிமுயற்சியே எனப் பலரிடம் கூறியுள்ளார்கள். இவ்வளவும் நடந்த போதிலும் தனது இணைவு முயற்சியில் வெற்றி கண்டு 1984 ஏப்பிரலில் EROS, EPRLF என்பவற்றை இணைத்து ஈழ தேசிய விடுதலை முன்னணி (ENLF) யை உருவாக்குவதில் வெற்றி கண்ட TELO, LTTE யிற்கும் இணைவிற்கான அழைப்பை விடுத்திருந்தது. அவ்வேளை மீண்டும் களத்தில் இணைவதாகக் கூறிக்கொண்ட இவர்கள் இவ் அழைப்பை புறக்கணித்ததோடு தொடர்ந்தும் தமது சதி முயற்சிகளை செய்தவண்ணமிருந்தனர். இவற்றுக்கெல்லாம் ஒற்றுமைக்கு முதலிடம் கொடுத்து வந்த TELO அமைதியாக இருந்தது. ஒரு வருட தாமதத்தின் பின்னர் மக்கள் மத்தியில் தனது செல்வாக்கு விழுந்துவந்ததை உணர்ந்து அதனை நிறுத்துக்கட்டும் நோக்குடன் 1985 ஏப்பிரலில் ENLF உடன் இணைந்து கொண்டது. இவ் இணைவானது TELO வின் ஒற்றுமையை விரும்பும் தன்மைக்கும் அதன் விட்டுக்கொடுக்கும் தன்மைக்கும் சான்றாகும். இதனை LTTE யின் தலைவர் பிரபாகரனும் அண்மையில் ஒப்புக்கொண்டுள்ளார். இவர். 13-11-85.ல் பம்பாயிலிருந்து வெளிவரும் "மராத்தியமுரசு" என்ற பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தலைவர் சிறிசபாரத்தினம் பற்றி கருத்துக் கூறும்போது "அவர் ஒரு செயல் வீரர் எங்கள் நான்கு இயக்கங்களும் ஒன்று சேர அவரே காரணம்". என்று கூறியிருந்தார். இவ்வொற்றுமை முயற்சியில் TELO இவ்வளவு தூரம் விட்டுக்கொடுத்திருந்தும் இதில் பயனடைந்தவை ஏனைய இயக்கங்களே.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


ENLF ல் இணைந்த போதும் LTT யினர் ஒற்றுமைக்குப் புறம்பான வேலைகளில் மேலும் ஈடுபட்டனர். LTTE என்ற பெயர் மங்கிப்போவதை விரும்பாத அவர்கள் தாம் ENLF இல் என்றும் தனித்துவமாக நிதி சேர்ப்பதை விரும்புவதாகவும் கூறி வந்தனர். இவ்வேலைகளின் உச்சக்கட்டமாக அண்மையில் 25-7-85 அன்று கிளிநொச்சியில் எமதியக்க ஆதரவாளராக இருந்த திரு ஆர். ராசாலிங்கம் எவ்வித காரணமும் இன்றி பயங்கரமான முறையில் படுகொலை செய்தனர். இவரது உடலில் 41 குத்துக்காயங்கள் காணப்பட்டன. இந்தச்சம்பவத்தைத் தொடர்ந்து எமது தோழர்கள் ஆத்திரமடைந்த போதிலும் நாம் பொறுமையாக இருந்தோம், ஒற்றுமையைக் கருத்தில் கொண்டு பதில் நடவடிக்கை எதுவும் எடுக்காமலிருந்தோம். ஆயினும் அதைத்தொடர்ந்து நடந்த சம்பவம் இவர்களின் அடாவடித் தனங்களை மேலும் எடுத்துக்காட்டியது.

8-8-85 அன்று எமது தோழர்கள் ஏறக்குறைய ஒரே சமயத்தில் நான்கு இடங்களில் LTTE யினரால் திட்டமிட்டமுறையில் தாக்கப்பட்டார்கள். நெல்லியடியில் எமது முகாமிற்கு காவலிற்கு நின்றவர்களில் சூட்டில் எமது தோழர் அன்ரன் அவ்விடத்திலேயே மரணமானார். மருதனாமடத்தில் எமது தோழர்கள் புஷ்பா, ஜோன்சன் என்பவர்கள் மோட்டார் சைக்கிளில் சென்றபோது LTTE யினர் சுட்டதில் தோழர் புஷ் கையில் பலமான காயமேற்பட்டது. இவர் கைமுறிந்து தற்போதும் சிகிச்சை பெற்றுவருகிறார். மிருசுவில் என்ற இடத்தில் எமது தோழர் நால்வர் மற்றும் சிலருடன் (VAN) "வான்" இல் வந்த போது "வான்" இல் வந்த LTTE யினர் சுட்டதில் ஒருவர் காயமடைந்தார். பருத்தித்துறையில் "வான்" இல் சென்ற எமது தோழர்கள் மீது LTTE யினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் இது வரை பொறுமையாக இருந்த எமது தோழர்கள் இச்சம்பவங்களால் பதற்றமடைந்தனர். இதன் போது தாவடியிலுள்ள LTTE யினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் LTTE யைச்சேர்ந்த ஒருவர் மரணமானார். இன்னுமொருவர் படுகாயமுற்றார். இப்பிரச்சனையை சுமுகமாக முடிவுக்குக் கொண்டுவர நாம் ENLF ஐக் கூட்ட முயன்றோம். இவ்வாறு பல பிரச்சனைகள் LTTE இவைய முன்னர் EROS, EPRLF ஆகியவற்றிடையே சுமுகமாகத் தீர்க்கப் பட்டிருந்தன. ஆனால் இம்முயற்சிக்கு LTTE யினர் பின் வாங்கினர். நமது எல்லா முகாம்களையும் வல்வெட்டித்துறைக்குள் கொண்டு வந்த இராணுவத்தினரின் தாக்குதலிற்குச் செய்வது போல் நமது முகாமைச் சுற்றி கண்ணி வெடிகள் நாட்டு இரண்டு நாட்களிற்கு மேல் பேசாமல் இருந்தனர். அதன் பின்னர் தான் LTTE யைச் சேர்ந்த தோழர் பாலசிங்கம் எம்மை அணுகி பிரச்சனையைப் பேசி முடிவுக்குக் கொண்டு வருவோம் என்றார். இச்சம்பவத்தின் பின்னும் எமது ஒற்றுமை காக்கப்பட வேண்டுமென்பதில் நாம் உறுதியாகவிருந்தோம்.

மேலும், அண்மையில் பரவலாக தமிழீழத்தில் நடந்த பொது மக்கள் கொலை, கொள்ளை, ஆட்கடத்தல் போன்ற சம்பவத்தையிட்டு எமது மக்கள் அனைவரும் இயக்கங்களையிட்டு அதிருப்தியடைந்திருந்தனர். இச்சம்பவம் தொடர்பான சில உண்மைகளை இங்கே குறிப்பிடுதல் பொருத்தமானதாகும். இச்சம்பவங்கள் பலவழிகளில் நிகழ்ந்துள்ளன. சில பெரிய இயக்கங்கள் சிறிய இயக்கங்களின் பெயரில் தமது ஆட்களை வைத்து நடாத்துதல், சிறிய இயக்கங்கள் நேரடியாகப் பங்குபற்றுதல் தம்மைப் பெரிய இயக்கம் என கருதிக்கொள்ளும் இயக்கங்கள் நேரடியாக ஈடுபடல் சிலதனிநபர்கள்-அல்லது கோஷ்டிகள் ஏற்கனவே உள்ள இயக்கங்களின் பெயரில் நிகழ்த்துதல் போன்றன அவற்றில் சிலவாகும்.

உதாரணமாக, அண்மையில் புத்தூரில் நவக்கிரி என்ற இடத்தில் ஒரு வீட்டின் உரிமையாளர் கொலை செய்யப்பட்டு நகைகள் கொள்ளையடிக்கப் பட்டன. ஒரு பெரிய இயக்கம் எனத் தன்னைக் கூறிக்கொள்ளும் ஒரு இயக்கம் செம்படை என்ற பெயரில் நிகழ்த்திய அட்டூழியமாகும். இதில் சம்பந்தப் பட்டவர்களைப் பிடிக்க நாம் பல முயற்சிகள் எடுத்திருந்தோம். இச்சம்பவத்தினை அவ்வியக்கம் TELO வின் தலையில் போடவும் முயற்சிசெய்தது எனினும் இப்பகுதி மக்கள் இவ் இயக்கத்தை அடையாளம் தெரிந்து கொண்டனர்.

www.tamilarangam.net



மற்றுமோர் சம்பவத்தில் கல்வியங்காட்டைச் சேர்ந்த ஜெயம் என்பவர் வீட்டில் சென்று மிரட்டி கொள்ளையடித்ததுடன் அவரின் காரையும் எடுத்துச் சென்றவர் அவர்களை பிடித்து விசாரித்தபோது பனாங்கொட மகேஸ்வரன் தலைமையிலான இயக்கம் என அறிந்து மக்கள் முன் அம்பலப்படுத்தினோம். காரினையும் திரும்ப ஒப்படைக்கச் செய்தோம். மேலும் இதே இயக்கத்தினர் முன்னாள் பா.உ யோகேஸ்வரனின் ஜீப்பை எடுத்துச் சென்றதுமல்லாமல் TELOவில் குற்றம் சாட்டினர். நாம் அவர்களைப் பிடித்து மக்களிடமும், வீட்டாரிடமும் இனங்காட்டினோம்.

மக்கள் அறியக்கூடிய வகையில் போராளிகள் கொள்ளையில் ஈடுபட்ட சம்பவங்கள் EPRLFஐப் பொறுத்தவரையில் நடந்துள்ளன. உதாரணமாக ஊர்காவற்றுறையில் ஒரு வீட்டில் கொள்ளையடித்த EPRLF இனரை மக்கள் துரத்தி அவர்களது முகாம்வரைக்கும் சென்று பிடித்து வந்து அடித்தனர். இன்னுமொரு சம்பவத்தில் வடலியாவில் ஒரு வீட்டில் கொள்ளையடிக்கப்போய் பிடிபட்ட இவர்களில் இருவரை நாம் விசாரிப்பதாகக் கூறி வேட்டி EP இவர் கூட்டிச்சென்றனர். அண்மையில் யாழ் புகையிரத நிலையத்தில் கொள்ளையடித்த இவர்கள் இச்சம்பவம் பொது மக்களிற்கு தெரியவர கொள்ளையடித்த பணத்தை திரும்ப புகையிரத நிலையத்தில் ஒப்படைப்பதாகக் கூறினர். மேலும் காரைநகரில் எமதியக்கத்தைச் சேர்ந்த தோழர் ஒருவரின் சகோதரியின் வீட்டிற்கு சென்று நகைகளைக் கொள்ளையடித்ததுமல்லாமல் அங்கிருந்த கதிரை, மேசைகளையும் எடுத்துச் சென்றனர்.

இச்சம்பவங்களுக்குச் சிகரம் வைத்தாற்போல யாழ் பெருமாள் கோயில் கொள்ளைச் சம்பவம் நடைபெற்றது. அப்போது நாம் கொள்ளையரை அதில் இருவரை கைது செய்து விசாரித்ததாகவும் அவர்கள் ஓர் இயக்கமென தெரிந்து பின்னர் எச்சரித்து விடுவித்ததாகவும் 21-10-85. அன்று LTTE யினர் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருந்தனர். ஆனால் பின்னர் விசாரித்த போது கோயில் கொள்ளை EPRLFயினால் செய்யப்பட்டதாகவும் LTTE யினர் சுட்டு வெடித்தது கொள்ளையரை பிடிக்கவந்த மக்களை கலைப்பதற்காகவும் என தெரிய வந்தது. LTTE யின் அறிக்கையின் படி ஏன் அக்கொள்ளையரை மக்களிடம் பகிரங்கமாக அறிவிக்கவில்லை என வினவியிருந்தோம். அத்துடன் செயலக்குழுவைப்போலவே போல் வாளாவிருந்த இவர்கள் அண்மையில் EPRLFஉடன் ஏற்பட்ட சில பிரச்சனைகளைத் தொடர்ந்து நாம் இதனை வெளியிடப் போவதாக தோழர் பாலசிங்கம் தெரிவித்தார். இவ்வாறு இருந்தபோதிலும் இக்கொள்ளையினை TELO வின் மீது பழி போடவும் LTTE யினர் முயற்சி செய்தது தெரிந்ததே. ஆனால் இச்சம்பவம் தொடர்பாக அப்பகுதி மக்களிற்கு உண்மை தெரிந்திருந்தது.

மேற்படி கொள்ளையைத் தொடர்ந்து பல கோவில்களில் நாம் காவல் போட்டிருந்தோம். அண்மையில் நல்லூர் கந்தசாமி கோவிலில் கந்தசஷ்டியன்று இவ்வாறு நிற்ற போது அங்கு முதலில் EPRLFஐச் சேர்ந்த தோழர்கள் (VAN) வேனில் வந்து பார்த்துவிட்டுச் சென்றனர். பின்னர் அங்கு வந்த 50-60 LTTE யினர் கொச்சைத் தமிழிலும் சிங்களத்திலும் பேசியவாறு அவ்விடத்தில் உறங்கிக் கொண்டிருந்த மக்களைக் கலைக்க முயன்றனர். எம் தோழர்கள் 150-200 யார் தூரத்திலேயே நிறுத்தி நாம் TELO Sentry நிற்கிறோம் எனக் கூறியவுடன் LTTE இனர் சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். எமது தோழர்களின் பதில் வேட்டுக்களுக்கே பின் வாங்கினர். இதைத்தொடர்ந்து நாட்டில் நாம் விடுத்த பிரசுரம் ஒன்றில் ஏன் LTTE யினர் சிங்களத்தில் பேசி சுட்டிருக்க வேண்டுமென்று விளக்க வேண்டும் என கேட்டிருந்தோம். இதற்குப் பதிலாக இவர்கள் வெளியிட்ட பிரசுரத்தில் இப்பிரச்சினையை திரித்து தங்களின் உட்பிரச்சனைகளை மறைக்கத்தான் இவ்வாறு நாம் குறிப்பிட்டதாக தெரிவித்திருந்தனர். மேலும் தற்போது வீடொன்றில் கொள்ளையடித்துவிட்டு வந்த EPRLFஐவரை கலைத்து கொண்டு அவ்வழியால் நாம் வந்ததைத்தான் TELOவினர் இவ்வாறு கூறியதாக பிரச்சாரம் செய்து வருகின்றனர். தற்போது LTTE யும் EPRLF உம் பல பிரச்சனைகளில் மாறி மாறி குற்றம் சாட்டி வருகின்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



LTTE இயக்கத்தினர் எமதியக்கத்திற்கு எதிரான விசமத்தனமான பிரச்சாரங்களில் ஈடுபடுவதற்கு காரணம் தமது இயக்கத்திற்குள் நடந்த சம்பவங்களை மூடி மறைக்கலாம் எனநினைத்துக்கொண்டே செயற்படுவதாகும். அண்மையில் இவர்களின் அடாவடித்தனங்களை சகிக்கமுடியாத உறுப்பினர்கள் 21 பேர் மன்னாரை இருப்பிடமாகக் கொண்ட ராஜேஸ் என்பவரின் தலைமையில் LTTE யைவிட்டு பிரிந்து சென்றனர் இதில் நெல்லியடியைச்சேர்ந்த ரூபன் என்பவரை இவர்கள் பிடித்து படுகொலை செய்துள்ளனர். பிரான்ஸில் LTTE யினரிற்கு வேலை செய்துகொண்டிருந்த கொம்மாந்துறையைச் சேர்ந்த அகிலன் என்பவரும் வெளியேறியவர்களில் ஒருவராவார். இவர்பிரான்ஸில் இருந்து வந்து LTTE யில் பயிற்சி பெற்றவர். இவரையும் கொலை செய்வதற்கு பல முயற்சிகள் செய்தனர். சென்னையில் உள்ள வடபழனி என்ற இடத்தில் வைத்து இவரைப்பிடிக்க முயன்றபோது மக்கள் தடுத்ததால் விடுவிக்கப்பட்டார். அண்மையில் தமிழ்த்தில் LTTE யின் அரியாலை முகாமில் பீற்றர் என்பவர் இறந்து காணப்பட்டார். இவர் சயனைட் அருந்தி தற்கொலை செய்தாரென செய்திகள் பரப்பப்பட்டன. ஆனால் உண்மையில் LTTE யின் வடமாகண இராணுவப் பொறுப்பாளர் கிட்டுவிற்கும் இவரிற்கும் ஏற்பட்ட பிரச்சனையில் இவரை கொலை செய்ததாக மக்கள் மத்தியில் பரவலாகப் பேசப்படுகின்றது.

இதேபோன்று வவுனியாவில் 16-10-85. அன்று EPRLF இனர் 25 மூட்டைகள் அரிசி கேட்டு ஆலை உரிமையாளர் கிருஸ்ணலோக் என்பவரிடம் அணுகிய போது 3 மூட்டைகள் தருவதாகவும் அதற்குமேல் தரமுடியாது எனவும் பின்னர் வந்து எடுத்துச் செல்லுமாறும் கூறினார். EPRLF தோழர்கள் 18-10-85 அன்று அரிசி ஆலைக்குச் சென்று உரிமையாளரிடம் அணுகியபோது ஏற்கனவே திட்டமிட்ட படி LTTE யின் அனுசரணையுடன் EPRLF உறுப்பினர்கள் பொல்லுகளினாலும், இரும்புக்கம்பிகளினாலும் தாக்கப்பட்டனர். அத்துடன் அவர்கள் ஆயுதங்களையும் பறித்தனர். இதன்பின்னர் அண்மையில் EPRLF இனர் அவ் அரிசி ஆலை உரிமையாளரையும் அவரது மகனையும் மீண்டும் சென்று விசாரித்தபோது ஏற்பட்ட கைகலப்பிலே அவர்களிருவரையும் சுட்டுக்கொன்றனர். இவ்வுரிமையாளர் LTTE யினருக்கு கப்பப் பணம் கட்டியவர். இதனை அவரின் மரணச்சடங்கில் அவரது மனைவி "50 ஆயிரம் ரூபாவும் 2 மூட்டை அரிசியும் வாங்கி பாதுகாப்பு அளிப்பதாகச் சொன்னீர்களே" என்று LTTE யினரைப்பார்த்துக் கேட்டதிலிருந்து உறுதியாக்கலாம். இவ்வாறு LTTE யினர் கூறி இக்கொலைச் சம்பவங்களுக்குப் பொறுப்பாகவிருந்ததாக EPRLF தோழர்களான இன்பம் (றேகன்) உட்பட 30 பேரைக் கைது செய்தனர். இன்பம் என்பவர் பயிற்சி பெற்ற போராளியாவர். இவரை வேண்டுமென்றே LTTE யினர் சுட்டுக்கொன்று சமூகவிரோதிகளிற்குக் கொடுக்கும் தண்டனை போல் மின்கம்பத்தில் கட்டினர். இவர்களே வல்வட்டித்துறையில் தொழிலதிபராகிய விஸ்வநாதசுந்தரம் என்பவரை பலாத்கார முறையில் கடத்திச் சென்று 1½ கோடி ரூபாயை பலவந்தமாகவும் நகையாகவும் அபகரித்தனர். 3வர்த்தகர்களை யாழ் நகரில் கடத்திச் சென்று இதேபோல் கப்பம் கோரியிருந்தனர். இதனை மக்கள் எதிர்த்து யாழ்நகர் பூராகவும் கடையடைப்புச் செய்தனர். இவ்வர்த்தகர்களை விடுதலை செய்வதற்கு TELO எடுத்த முயற்சியின் காரணமாகவே இவர்கள் விடுதலை செய்தனர். இப்படியாக தமிழீழமக்களை பல வழிகளில் இம்சித்து பல அடாவடித்தனங்களைச் செய்த LTTE யினர் சக இயக்கத்தைச் சேர்ந்த் ஒரு போராளிக்கு தண்டனையளிக்க அருகதையற்றவர்கள்.

1985 ஆகஸ்ட்டில் TELO வினைச் சேர்ந்த 5 பேரை கைதுசெய்து கொல்ல முயற்சி செய்யும்போது இருவர் தப்பியோடினர், மூவர் கொலை செய்யப்பட்டனர். தப்பி வந்த அவ்விருவரும் மக்கள் மத்தியில் அம்பலப்படுத்திய போது அதற்குமாறாக உண்மைக்குப் புறம்பான திரிபட்ட கதைகளை LTTE யினர் துண்டுப்பிரசுரம் மூலம் கூறினர். இதே போன்றே LTTE யினரின் அடாவடித்தனங்கள் மேலும் தொடர்ந்தன.

www.tamilarangam.net



அண்மையில் வல்வட்டித்துறையைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்களை பட்டியல் போட்டு தலைக்கு 2 லட்சம் 3 லட்சம் எனக்கோரியுள்ளனர். இப்பட்டியலில் சந்தானம், பிருதிபராஜ் என்பவர்கள் உட்பட 45 பேர் அடங்குவர். LTTE யின் அடாவடித்தனங்களினால் தாமாகவே மக்கள் நிதி கொடுக்க முன்வராதபோது அவர்கள் பலவழிகளிலும் மிரட்டப்பட்டனர். உதாரணமாக வல்வட்டித்துறையைச் சேர்ந்த குருநப்பிள்ளை என்பவரிடம் 1 லட்சம் தருமாறு மிரட்டி அவர் தனது இயலாமையைக் கூறியபோது அவரின் காணியை தமக்கு எழுதித்தருமாறும் இவர்கள் மிரட்டியுள்ளனர்.

தமிழீழ மக்களிற்கு எதிராக மட்டுமல்ல சக இயக்கங்களுக்கெதிராகவும் LTTE யினரின் கீழ்த்தரமான அடாவடித்தனங்கள் தொடர்கின்றன. முல்லைத்தீவில் உள்ள LTTE யினர் அண்மையில் கட்டாகச் சேர்ந்து இராணுவத்தைத் தாக்குவோமென EPRLF தோழர்களை அழைத்துச் சென்றனர். செல்லும் வழியில் திடீரென EPRLF இனரின் நெஞ்சுக்கெதிராக ஆயுதங்களை நீட்டியபடி கைகளை உயர்த்தச் சொல்லிவிட்டு அவர்களின் ஆயுதங்களைப் பறித்தெடுத்துக்கொண்டு அடித்துத் துரத்திவிட்டனர். எல்லாமாக 6 துப்பாக்கிகளையும் 20 கைக்குண்டுகளையும் பறித்துள்ளனர். இச்சம்பவங்களில் இருந்து இவர்கள் பொது மக்களிற்கும் சக இயக்கங்களிற்கும் இயக்கங்களின் ஒற்றுமைக்கும் எந்தளவு மதிப்பளிக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

LTTE யின் இவ்வாறான அடாவடித்தனங்களைப் பார்த்த பின்னர் ஒரு காலத்தில் LTTE யின் போலிக்கவர்ச்சியால் ஈர்க்கப்பட்ட புத்திஜீவிகள் பலர் விரக்தியடைந்தனர். டாக்டர் ராஜேந்திரன், இலண்டலைச் சேர்ந்த பாலசேகரம், வண பிதா சிங்கராஜா, நித்தியானந்தன், திருமதி நித்தியானந்தன்போன்றோர் இவர்களின் அடாவடித்தனங்களைக் கண்டித்தும் ஒற்றுமையை வலியுறுத்தியும் இயக்கத்தைவிட்டு வெளியேறினர். ஆக இவ் அடாவடித்தனங்களை ஆதரிப்பவர்களும், தூண்டிவிடுபவர்களும் மட்டுமே ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள். இதுஇவர்களின் அடாவடித்தனங்களை மேலும் ஊக்குவித்துள்ளது.

இவ்வாறு பலவிதமான அட்டூழியங்களில் ஈடுபட்ட LTTE யினர் உண்மையான மக்களின் விடிவிற்கு வழிவகுக்காது ஒற்றுமையை விரும்புபவர்கள்போல் நடித்துக்கொண்டு 1984ஏப்பிரலில் ஏற்பட்டENLF ல் இருந்த ஒற்றுமையைக் குலைக்கும் முயற்சிகளில் ENLFஇல் இருந்து கொண்டே ஈடுபட்டுள்ளார்கள். எமதியக்கத்திலிருந்து தோழர் தாஸ் என்பவர் 250 பேருடன் வெளியேறிவிட்டதாக விசமப்பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்களே முன்பும் சுதன், ரமேஸ் பிரச்சனையின்போது 500பேர் வெளியேறிவிட்டார்களென்ன அப்பட்டமான பொய்யைக் கூறித்திரிந்தார்கள். ஆனால் இதில் எதுவித உண்மையுமில்லை. உண்மையாதெனில் தமிழீழப்பகுதியில் நெல்லியடிப் பகுதிக்கு பொறுப்பாகவிருக்கும் தாஸ் என்பவருக்கும் யாழ்ப்பாணப் பகுதிக்குப் பொறுப்பாகவிருக்கும் பொபி என்பவருக்குமிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தபோதும் இவை தற்போது நீக்கப்பட்டுள்ளன இவர்களில் எவரும் இயக்கத்தை விட்டு வெளியேறவுமில்லை இயக்கத்தின் தலைமைக்கு எதிராகச் செயற்படவும் இல்லை. இன்று இருவரும் தலைமைக்கு விசுவாசமாகவே உள்ளனர். ஆனால் முன்பு நடந்த சுதன், ரமேஸ் பிரச்சனையில் தொடர்புடைய ஒரு சில தீயசக்திகள் சில தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அவைகளைச் சரியாக நாம் நிச்சயம் இனங்கண்டுகொள்வோம். இச்சம்பவங்களிற்குச் சரியான நடவடிக்கைகள் எடுத்து மிகவிரைவில் மக்கள் மத்தியில் தெளிவுபடுத்துவோம்.

நாங்கள் இவற்றை வெளியில் கூறாமல் இருப்பதைப் பயன்படுத்தியே LTTE யினர் விசமப்பிரச்சாரங்களில் ஈடுபட்டுள்ளனர். விசமப்பிரச்சாரத்துக்கு என்றே SOP என்ற மாணவர் அமைப்பை உருவாக்கி ஒற்றுமைக்கெதிரான பிரச்சாரங்களை பாரியளவில் மேற்கொள்கிறது. LTTE யினர் தாங்கள் தான் தமிழ்ப்போராட்டத்தை தனித்து நின்று நடாத்துவதாக மனப்பால் குடிக்கின்றனர். இதனாலேயே உண்மையான ஒற்றுமைக்கு தொடர்ச்சியாக பங்கம் விளைவிக்கின்றனர். 1985 ஏப்பிரலில் LTTE யினர் ENLF ல் மிகக்குறுகிய கால இடைவெளியில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

திடீரென இணையும்போது இவர்களின் கடந்தகால சதித்திட்டங்களையும் சுயரூபங்களையும் உணர்ந்துகொண்ட தமிழ் ஈழப் போராட்ட ஆதரவாளர்கள், ஏனைய இயக்க உறுப்பினர்கள் போன்றோர் இவர்களின் இணைவை ஐயத்துடன் நோக்கி எம்மிடம் வினவியிருந்தனர். ஆனாலும் உண்மையான ஒற்றுமைக்கு மதிப்பளித்த நாம் இவற்றையும் பொருட்படுத்தாது அவர்களை இணைத்துக்கொண்டோம். ஆனால் டாஈ யின் தற்போதைய நடவடிக்கைகள் இவ் ஐயப்பாட்டை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது. இவ்வாறான உண்மைகளை தெளிவு படுத்தும்முகமாகவே இந் நீண்ட அறிக்கையினை தங்களுக்குச் சமர்ப்பிக்கின்றோம்.

"உண்மைக்கு மேடையோ அன்றி வெளிச்சமோ போட்டுக்காட்ட வேண்டியதில்லை. அது மகத்தானது அது வெளி வருவதை எந்தச்சக்தியாலும் தடுத்து நிறுத்திவிட முடியாது"

-தமிழ் ஈழ தேசபிதா தங்கத்துரை.

தமிழ் ஈழ விடுதலை இயக்கம்.

MALARCHI INTERNATIONAL NEWS SERVICES
PLEASE RING (LONDON) (OI) 470 5048
between 7pm & 8am

FOR ANY OTHER INQUIRES
PLEASE RING (LONDON) (OI) 475 0403

&&& THANK-YOU &&&

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்